
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



**காலாண்டு இதழ்**
**(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)**
**ஆகிய மாதங்களில் வெளிவரும்**

*Vol:8 Issue :31 July 2026*

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*

## EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

**Dr. Ravindran A/L Maraya**

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

**Dr Silllalee A/L S.Kandasamy**

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr O.MUTHIAH**
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**
Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

**DR JAGADEESAN.T.**
Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**
Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**
Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
திரு ப. ஜெயகிருஷ்ணன்
முதன்மை ஆசிரியர்
முனைவர் பிரியாகிருஷ்ணன்


+917299587879
www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ்



# நற்றிணையில் பொருளாதார நிலை

# *Economic Conditions in Natrinai*

**த. கௌசல்யா,** முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை.

**நெறியாளர் : முனைவர் ஐ.சைராபானு,** உதவிப்பேராசிரியர், முதுகலை & தமிழ் உயராய்வுத்துறை, தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை - 642 126.

***T.Kowsalya***, *Research scholar of tamil department, Government Arts college, Udumalpet-642 126.*

***Research Supervisor :*** *Dr.J. Sairabanu , Assistant professor, PG & Research Department of Tamil, Government Arts college, Udumalpet-642 126.*

***Abstract***

*Natrinai, Natrinai, one of the Eight Anthologies (Ettuthokai) of Sangam literature, offers profound insights into the inner (akam) life and cultural practices of the ancient Tamils. The poems of Natrinai reveal that the early Tamil people sustained their livelihood through diverse economic activities adapted to their ecological environments. Agriculture, trade, animal husbandry, fishing, and other occupational practices constituted the principal means of meeting their material needs and ensuring economic stability. These productive activities not only strengthened the economic foundation of society but also contributed significantly to its social and cultural development. Against this background, the present study aims to examine the economic conditions of the ancient Tamils as reflected in the Natrinai poems, with particular emphasis on their occupations, production, exchange, and patterns of livelihood.*

***Keywords:*** *Economy -Scholarly Perspectives-Ecological Land Divisions — Hunting -Foxtail Millet Cultivation- Animal Husbandry -Agriculture -Fishing-Salt Production — Production — Storage -Barter System Trade.*

**ஆய்வுச் சுருக்கம்**

அகநூற்களில் ஒன்றாக விளங்கும் நற்றிணை மக்களின் அகவாழ்வை வெளிப்படுத்தி நிற்கிறது எனலாம். பண்டையத் தமிழர்கள் தம் வாழ்வியலை நிலை நிறுத்திக் கொள்ள பல்வேறு தொழில்களை மேற்கொண்டுள்ளனர். அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அடிப்படை வழிமுறைகளாக வேளாண்மை, வணிகம், கால்நடை வளர்ப்பு, மீன் பிடித்தல் போன்றவை

விளங்கின. இத்தொழில்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமூக வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்திருந்தன. எனவே நற்றிணைப் பாடல்களின் வழி பண்டையத் தமிழரின் பொருளாதார நிலையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**திறவுச் சொற்கள்:** பொருளாதாரம் — அறிஞர்கள் கருத்து — நிலப்பிரிவுகள் -வேட்டைத் தொழில் — தினை விதைத்தல் — கால்நடை வளர்த்தல் - உழவுத் தொழில் — மீன்பிடித்தல் — உப்பு விளைவித்தல் — உற்பத்தி — சேமிப்பு — பண்டமாற்று - வாணிகம்

**முன்னுரை**

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றிணை சமுதாய வாழ்வியலை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. திணைசார் வாழ்வில் மக்களுக்கு அத்தியாவசியமான தேவைகளுள் ஒன்றாகப் பொருளாதாரம் இருந்துள்ளது. தொடக்க காலத்தில் உணவுத் தேவையை நிவர்த்தி செய்வதற்காகப் பொருள் தேடலில் ஈடுபட்டு வந்த மக்கள் பின்னர் தங்களின் வாழ்வியலை வளமுடையதாக மாற்றுவதற்காகப் பொருள் தேடலில் ஈடுபடலாயினர். எனவே ஐந்திணைகளில் பொருளாதார மேம்பாடு எங்ஙனம் அமைந்திருக்கிறது என்பதனை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**பொருளாதாரம்:-**

பொருளாதாரம் என்பதற்கான வரையறையாக குறிப்பிடும்போது,

**"பொருளாதாரம் , பொருளியல், பொருள் நூல், அர்த்த சாஸ்திரம் என்று கூறுவதையெல்லாம் ஆங்கிலத்தில் *Economics* என்ற ஆங்கிலச் சொல் *Eco* என்ற கிரேக்க அடிச்சொல்லிலிருந்து பிறந்தது. இதில் கிரேக்க வேர்ச் சொல்லுக்குக் குடும்ப நிர்வாகம்(*House hold managements*) என்று பொருள்.[1] (திருவள்ளுவரின் பொருளியல் சிந்தனைகள் .ப.10)**

என்று ஆதியில் குடும்பத்தை நிர்வாகம் செய்வதையே பொருளியல் என்ற சொல் குறித்து வந்ததனை அறிய முடிகிறது.

**பொருளாதாரம் குறித்த அறிஞர்களின் கருத்து:**

மனித வாழ்வியலில் முக்கியமான ஒன்றாகப் பொருள் விளங்கியிருந்ததனை,

**"பொருள் மனிதனின் அடிப்படைத் தேவையாகும் இது பல்வேறு வடிவங்களில் காணப்படுகிறது. ஒரு பக்கம் செல்வத்தைப் பற்றியும் மறுபக்கம் முக்கியமான மனிதனைப் பற்றியும் பொருளியல் கூறுகிறது."[2] (பொருளாதார சிந்தனை வரலாறு.ப.1)**

என்று பொருளாதாரம் குறித்த ஆல்பிரட் மார்ஷல் கருத்தை ம.பா. குருசாமி பதிவு செய்கிறார். பொதுப் பொருளாதாரம் எனும் நூலில்,

**"உணவு, உடை, உறைவிடம், எரிபொருள், காம இன்பம் மற்றும் பிற மனித விருப்பங்கள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்பதைப் பற்றியும், அவை எவ்வாறு நாட்டின் பொது வாழ்வை மாற்றுகின்றன என்பதை பற்றியும், அவ்வாறு மாற்றமடையும் பொது வாழ்வினால் மனிதனது தேவைகளும் விருப்பங்களும் எவ்வாறு மாறுதல்கள் அடைகின்றன என்பதைப் பற்றியும் கூறுவது பொருளாதாரம்"[3] ( பொதுப்பொருளாதாரம்.ப.1-2).**

*என்று அறிஞர் பொருளாதாரத்தை மனித இயங்கியலுடன் தொடர்புபடுத்தி இருப்பதனை அறியவியலுகிறது.*

*பொருளாதாரம் பற்றிய தகவலைக் கே.கே. பிள்ளை குறிப்பிடும் பொழுது,*

**"பசி என்பது மனிதனது அடிப்படையான அடக்க முடியாத உணர்ச்சியாகும். பசியாற்றிக் கொள்ளும் பெரு முயற்சியில் இடைவிடாது உழன்று கொண்டிருக்கும் மனித முயற்சியை விளக்கிக் கூறுவதே பொருளாதாரமாகும்"[4] (தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்.ப.10)**

*என்று பசியின் அடிப்படையில் பொருளாதாரம் அமைந்துள்ளதனை எடுத்துரைக்கிறார்.*

**நிலப்பிரிவுகள்:**

*தமிழ்ச் சமூகத்தில் மக்களின் வாழ்க்கை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலம் சார்ந்து அமைந்திருந்தன. ஒவ்வொரு நிலத்திற்குத் தகுந்த தொழில்களைச் செய்து அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொண்டனர். எனவே மக்களுக்கு பொருளியல் கூறுகளில் நிலம் அத்தியாவசியமான ஒன்றாக விளங்கியருத்தலை உணர முடிகிறது.*

**குறிஞ்சி நிலப் பொருளாதாரம்:**

*குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த நிலமாகும். இங்கு வாழக்கூடிய மக்கள் குறவன், குறத்தியர் எனப்பட்டனர். இவர்கள் மலைகளில் விளைந்த திணை, ஐவன நெல், கிழங்கு, தேன் முதலிய பொருட்களை விற்பனை செய்து பொருளாதாரத் தன்னிறைவு உடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.*

**வேட்டைத் தொழில்:**

*ஆதியில் மனிதர்கள் காடுகளில் உள்ள விலங்குகளை வேட்டையாடித் தங்களின் உணவுத் தேவையை நிறைவு செய்துள்ளனர்.*

**"கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப்**
**பச்சூண் பெய்த பகழி போல"[5] (நற்.பா.75)**

*எனும் பாடலானது வேட்டுவர் கொடியவில்லைப் பயன்படுத்தி பன்றியை வீழ்த்தி தங்களின் உணவுத் தேவையை நிறைவு செய்துள்ளனர் என்பதனை வெளிப்படுத்துகிறது.*

கானவன் வேட்டையாடிய விலங்கின் ஊனைத் தான் மட்டுமில்லாமல் தன் குடிகளுடன் பங்கிட்டு கொண்ட தகவலை,

**"சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்"[6] (நற்.பா.26)**

என்கிற நற்றினணைப் பாடல் எடுத்துரைக்கிறது.

**தினை விதைத்தல்:**

குறிஞ்சி நிலத்தவர் தங்கள் வாழக்கூடிய நிலத்தினை வளமிக்கதாக மாற்றுவதற்கு மலைச்சாரலில் உள்ள தோட்டங்களில் பல வகையான தானியங்களை விதைத்து உற்பத்தியைப் பெருக்கி பொருளாதாரத்தை மேம்படுத்தி உள்ளனர் என்பதனை,

**"கூலம் எல்லாம் புலம்புக, நாளும்**

**மல்லற்று அம்மஇம் மலைகெழு வெற்று! எனப்"[7] (நற்.பா.30)**

என்று மலையனார் தம் பாடலில் குறிஞ்சி நில மக்களின் பொருளாதார வளமைக்கு உறுதுணையாக இருந்த தினை விதைத்தலைக் குறிப்பிடுகிறார். தினைப்புனம் காத்தலில் மகளிரின் பங்கு பெரும்பான்மையாக இருந்துள்ளதனை அறிய முடிகிறது. சங்க கால மகளிர் பறவைகள் மற்றும் விலங்குகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாத்து வேளாண் உற்பத்தி வளர்ச்சிக்கு வழிவகை செய்துள்ளதனை,

**"கொடிச்சி காக்கும் அடுக்கல் பைந்தினை"[8] (நற்.பா.7:1)**

என்கிற பாடல் உணர்த்துகிறது மேலும் பொருளாதார உற்பத்தியில் மகளிரின் பங்கினையும் அறிய முடிகிறது. மிளகு மற்றும் யானைத் தந்தங்களைப் பிறபகுதிகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கக் கூடும் என்பதனையும் அறியமுடிகிறது.

**முல்லை நிலப் பொருளாதாரம்:**

முல்லை என்பது காடு சார்ந்த நிலப்பரப்பாகும். இங்கு வாழக்கூடிய மக்கள் கால்நடைகளை வளர்ப்பதினால் ஆயர், ஆய்ச்சியர், கோவலர் என்று அழைக்கப்பட்டனர். பண்டைய சமூகத்தில் பொருளாதார வளமையை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளுள் ஒன்றாக கால்நடை வளர்த்தல் இருந்துள்ளது. மேலும் அன்று கால்நடைகள் பெருஞ்செல்வமாக கருதப்பட்டது. ஆண்கள் ஆடு மாடுகளை மேய்த்தல் தொழிலில் ஈடுபடலாயினர். பால் கறத்தல் மற்றும் பால்படு பொருட்களான மோர், தயிர், வெண்ணெய் முதலானவற்றைத் தயாரித்துப் பண்டமாற்றம் செய்தல் வரையிலான அனைத்து செயல்பாடுகளையும் பெண்கள் மேற்கொண்டிருந்தனர். எனவே கால்நடைகளை மூலதனமாக கொண்டு பெண்கள் சமூகத்தையும் குடும்பத்தையும் மேம்படுத்திக் கொண்டுள்ளதனை உணரமுடிகிறது. அகன்ற தெருக்களில் இடையன் ஒருவன் பால்விலை கூறி விற்று வந்துள்ளதனை,

**"ஞெலி கோல் கலப்பை அதளொடு சுருக்கி**

**பறிப் புறத்து இட்ட பால் நொடை இடையன்"[9](நற்.பா.142)**

என்கிற முல்லைப் பாடலின் வழி அறிவியலுகிறது.

**உழவுத் தொழில்:**

முல்லை நில மக்கள் வரகு, கொள், உளுந்து, தினை முதலானப் பயிர்களை விளைவித்துள்ளனர். மேலும் உழவுத் தொழில் அறிந்தவர்களாகவும் விளங்கியுள்ளனர். நிலத்தை எருதுகளைக் கொண்டு பலமுறை உழுது பண்படுத்திய பிறகு வரகினை விதைத்து உற்பத்தி செய்து வந்துள்ளதனை,

**" விதையர் கொன்ற முதையல் பூழி**

. **விடுமுறை நிரப்பிய ஈரிலை வரகின்"[10](நற்.பா.121)**

என்கிற முல்லைப் பாடலின் வழி அறியவியலுகிறது. விதையர், முதையல் எனும் சொற்கள் பயின்று வருவதன் வழியாக மேய்ச்சல் தொழிலை மேற்கொண்ட முல்லை நிலத்தவர் உழவர்களாகவும் விளங்கியிருத்தலை உணர முடிகிறது.

**"இரும் பனிப் பருவத்த மயிர்க் காய் உழுந்தின் "[11](நற்.பா.89:5)**

எனும் பாடல் முல்லை நிலத்தார் உளுந்தினை உற்பத்தி செய்ததனை குறிப்பிடுகிறது. வேட்டையாடுதல், உழவு, கால்நடை வளர்த்தல் முதலானவற்றின் மூலம் முல்லை நிலத்தாரின் பொருளாதார நிலையை அறியவியலுகிறது.

**மருத நிலப் பொருளாதாரம்:**

மருதம் என்பது வயல் வெளிகள் நிறைந்த சமமான நிலப்பரப்பாகும். இங்கு வாழக்கூடிய மக்கள் உழவன், உழத்தியர் எனப்பட்டனர். மருதநிலமானது நீர் வளம் நிறைந்த பகுதி என்பதனால் இங்கு உழவுத் தொழிலே முக்கியத் தொழிலாக விளங்கியது. நெல், கரும்பு முதலான பயிர்கள் விளைவிக்கப்பட்டது.

**உழவுத் தொழில்:**

நிலத்தை உழுவதற்கு மாடுகளையும் எருதுகளையும் பயன்படுத்தினர். பலமுறை உழுது பண்படுத்தப்பட்ட ஈரமான நிலத்தில் விதைகளை நடவு செய்துள்ளனர். இத**னை,**

**" வித்தோடு சென்ற வட்டி பற்பல**

**மீனோடு பெயரும் யாணர் ஊர "[12] (நற்.பா.210)**

என்ற நற்றிணைப் பாடலானது மருத நில விவசாயம் குறித்துப் பகர்கின்றது. மேலும் மகளிர் நடவு செய்ததற்கு கூலியாக கடகப் பெட்டிகளில் வயல்களில் உள்ள மீன்களைப் பிடித்துச் சென்றுள்ளதனையும் காட்சிப்படுத்துகிறது நற்றிணை.

**சேமிப்பு:**

மருதத்தில் மிகுதியான நெல் விளைச்சல் ஏற்படுவதினால் மக்களின் நுகர்வுக்கு அளிக்கப்பட்டது போக எஞ்சியுள்ள நெற்களைத் தானியக் கூடுகள் அமைத்து சேமித்து வைத்துள்ளனர் என்பதனை ,

**"பெறு நெற் பல் கூட்டு எருமை உழவ!"[13] (நற்.பா.60:2)**

**என்**று தூங்கலோரியார் தம் பாடலில் நெல்லை தானியக் கூடுகளில் சேமித்து வைத்த செய்தியைப் பதிவு செய்துள்ளார்.

**கால்நடை வளர்த்தல்:**

ஆடு, மாடு, எருமை முதலான கால்நடைகளை வளர்ப்பதன் வாயிலாக பொருளாதாரத்தில் மேம்பட்டவர்களாக மருத நிலத்தவர் திகழ்ந்துள்ளனர். எருமை மாடுகளிலிருந்து பால் கறந்து விற்றல், ஆனிரை விற்றல் மூலமாகத் தங்களின் பொருளாதாரத்தையும் வாணிகத்தையும் வளர்த்துக் கொண்டு சிறந்து விளங்கினர் எனலாம்.

**நெய்தல் நிலப் பொருளாதாரம்:**

நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த நிலப் பகுதியாகும். இந்நிலத்தவர் பரதவர் நுழையர், நுளைச்சியர், உமணர், வலைஞர் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். மீன்பிடித்தல் தொழில் இவர்களின் பொருளாதாரத்திற்கு முதன்மையாக அமைந்ததோடு உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொள்ளவும் பயன்பட்டு வந்துள்ளது..

**மீன் பிடித்தல்**

பரதவர் கடலுக்குச் சென்று இறால், சுறா முதலான மீன்களைப் பிடித்து வந்து கடற்கரையில் விற்பனை செய்து வந்தனர். எஞ்சிய மீன்களை உப்பிட்டுக் காயவைத்து கருவாடு ஆக்கி அதனை மீண்டும் விற்பனை செய்யும் நுட்பத்தினை பரதவர் அறிந்திருந்தனர். பரதவர் பலவகையான மீன்களோடு சுறா மீனையும் பிடித்து வந்ததனை,

**"திமில்மேற் கொண்டு, திரைச்சுரம் நீந்தி**

. **வாள்வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி"[14] (நற்.பா.111:6-7)**

என்ற நற்றிணைப் பாடல் புலப்படுத்துகிறது.

**உப்பு விளைவித்தல்:**

உப்பு விளைவிக்க கூடியவர்களை உமணர் என்பர். இவர்கள் கடல் நீரைப் பாத்திகளாகக் கட்டி உப்பினை விளைவிப்பர். விளைவித்த உப்பினை மாட்டு வண்டிகளில் ஏற்றிச்சென்று பிற பகுதிகளில் வாணிகம் செய்து வந்திருப்பதனை,

**"கொண்டும் செல்வர்கொல் — தோழி! — உமணர்**

**வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி**

**கண நிரை கிளர்க்கும் நெடு நெறிச் சகடம் "[15] (நற்.பா.5:7-10)**

என்கிற பாடல் குறிப்பிடுகிறது. உப்பிற்கு விலையாக நெல்லைப் பெற்றிருப்பதன் வாயிலாக அன்றைய காலத்தில் நெல்லானது உப்பிற்கு நிகரானதாக விளங்கியுள்ளது எனலாம். அறுவை (துணி), சங்கு (வளை), முத்து, யானை தந்தம் முதலிய பொருட்களும் விற்பனை செய்யப்பட்டு வந்திருப்பதன் மூலமாக நெய்தல் நிலத்தின் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்ள முடிகிறது .

**வாணிபம்:**

பண்டையத் தமிழர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபங்களில் சிறந்திருந்தனர். தோணி, நாவாய், படகு , மரக்கலன் முதலியவற்றை கடல் வழி வாணிபத்திற்குப் பயன்படுத்தினர். மருங்கூர் பட்டினம், கொற்கை, முசிறி, தொண்டி போன்றன துறைமுகப் பட்டினங்களாக விளங்கியது.

பரதவர் மீன்களைப் பிற நாடுகளுக்கு கொண்டு வாணிபம் செய்துள்ளதனை, நற்றிணையில்(38)வது பாடல் குறிப்பிடுகிறது. அதேபோல் பல நாடுகளின் கப்பல்களும் பல வகையான பொருட்களுடன் நம் நாட்டிற்கு வந்துள்ளதனை,

**" வேறுபல் நாட்டுக் கால்தர வந்த**

. **பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறை"[16] (நற்.பா.295)**

என்கிற பாடல் உணர்த்துவதன் மூலம் பண்டையத் தமிழர்கள் வாணிகத்தில் ஏற்றுமதி இறக்குமதி செய்வதில் மேம்பட்டு இருத்தலை அறியவியலுகிறது.

**பண்டமாற்று முறை:**

பண்டையத் தமிழர் தங்கள் நிலத்தில் கிடைத்த பொருட்களை அல்லது தமது உழைப்பின் மூலம் கிடைத்த பொருட்களை, பிற நிலத்தவரிடம் கொடுத்து அதற்கு பதிலாக தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொண்டமையே பண்டமாற்று முறையாகும். சங்ககாலத்தில் இம்முறையே பெருவாரியாகப் புழக்கத்தில் இருந்தது.

நெய்தல் நில மக்கள் தங்கள் உப்பளங்களில் விளையக்கூடிய உப்பினை விற்று அதற்கு விலையாக நெல்லை பண்டமாற்றாக பெற்று வந்ததனை,

**"உமணர் தந்த உப்பு நொடை நெல்லின் "[17] (நற்.பா.254)**

என்கிற பாடலில் உலோச்சனார் குறிப்பிடுகிறார். இதேபோல் பரதவர்கள் கடலுக்குச் சென்று பிடித்து வந்த இறால், சுறா முதலான மீன்களைப் பரதவ மகளிர் விற்று அதற்கு மாற்றாக நெல்லைப் பெற்று வந்துள்ளதனை,

**“ மான்ற மாலை மகிழ்ந்த பரதவர்**

**இனிதுபெறு பெரு மீன் எளிதினின் மாறி”[18] (நற்.பா.239)**

எனும் குன்றியனார் பாடலின் வழி அறியலாம். உழவர் மகளிர் தெருக்களில் பல வகையான மலர்களை விற்றுச் சென்றுள்ள செய்தியினையும்,

**“ புதுமலர் தெருவுதொறும் நுவலும்**

**நொதுமலாட்டி”[19] (நற்.பா.118:8-11)**

**“துய்த்தலை இதழ்பைங் குருக்கத்தியோடு**

**பித்திகை விரவுமலர் கொள்ளீரோ என**

**வண்டு சூழ் வட்டியுள் திரிதரும்”[20] (நற்.பா.91:6-8)**

எனும் பாடல்களின் வழியாக மலர்களுக்கு விலையாக நெல் முதலான தானியங்களைப் பெற்றிருக்கக் கூடும் என்பதனையும் அறியவியலுகிறது. எனவே பண்டமாற்று முறையானது உணவுத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு மட்டுமே சிறப்புடையதாக விளங்கியது எனலாம்.

**முடிவுரை:**

சமூகத்தின் சீரான இயங்கியலுக்குப் பொருளாதாரம் இன்றியமையாததாக அமைகின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், என நிலச்சூழலின் அடிப்படையில் அமைந்த தொழிலினைச் செய்து உற்பத்தியைப் பெருக்கியுள்ளதனை அறியப்படுகிறது. பொருட்களின் உற்பத்தி, மூலதனம், நுகர்வு, பண்டமாற்றம், வாணிகம் முதலானப் பொருளாதார தொடர்புகளின் மூலம் பண்டைக்கால பொருளாதார நிலையினை இக்கட்டுரையின் வழியாக அறிய முடிகிறது.


**முதன்மைச் சான்றாதாரம்**

1. முனைவர்.கு.வெ.பாலசுப்ரமணியன் (உ.ஆ) - நற்றிணை மூலமும் உரையும், நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ், அம்பத்தூர், சென்னை - 98, நான்காம் பதிப்பு, அக்டோபர் -2011.

**பார்வைநூல்கள்**

1. ப. முருகன் - திருவள்ளுவரின் பொருளியல் சிந்தனைகள் , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,

சென்னை -98.

முதற்பதிப்பு -1994,

2. ம.பா. குருசாமி - பொருளாதாரச் சிந்தனை வரலாறு,
விஜயா பதிப்பகம்,
திண்டுக்கல்-624001.
முதல் பதிப்பு -2008,

3. என்.எஸ்.பாலசுப்பிரமணியன்& என்.வேணுகோபாலன் - பொதுப் பொருளாதாரம்,
விஜய் நிக்கேதன் பதிப்பகம்,
சென்னை ,
மறு பதிப்பு — 2008.

4. கே.கே.பிள்ளை - தமிழக வரலாறும் பண்பாடும்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, மறுபதிப்பு- 2018.

*BOOKS :*

1. *Dr.Ku.Vae. Balasubramanian (Ed),*
*Natrinai (Mulamum Vuraiyum),*
*New Century Book House Ambattur,*
*Chennai — 600098, 4th Edition — October 2011.*

2. *P.Murugan,*
*Thiruvalluvarin Poriliyal Sinthanaikal,*
*New Century Book House,*
*Chennai-98,*
*1st Edition — 1994.*

3. *M.P. Gurusamy,*
*Porulathara Sinthanai varalaru,*
*Vijaya Publication,*
*Dindigul — 624001,*
*First Edition — 2008.*

4. *N.S. Balasubramanian & N. Venukopalan,*
*Pothuporulatharam ,*
. *Vijay Nikkethan publication,*
*Chennai,*
*Reprint — 2008.*

5. *Dr.K.K.Pillai,*
*International Institute of Tamil Studies,*
*Chennai — 600113,*
*Reprint — 2018.*

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com